பயணியர் எண்ணிக்கை 2 லட்சம் பேராக உயரும் என எதிர்பார்ப்பு

சென்னை மெட்ரோ ரயில் விம்கோ நகர் வரை நீட்டிப்பு

■ சென்னை, வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர், மெட்ரோ ரயில் சேவை நேற்று துவங்கியது.

சென்னை, பிப். 15–

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் மெட்ரோ ரயில் சேவை விம்கோ நகர் வரை நீட்டிக்கப் பட்டுள்ளதால், தினமும், 2 லட்சம் பேர் பயணம் செய்வர் என, நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் மெட்ரோ இடையே, மெட்ரோ ரயில் போக்குவரத்து உள்ளது.

இதன் நீட்டிப்பு நிட்டத்தில் வண்ணாரப் பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 9.051 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை, 3,770 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாதையில், தியாக ராயா கல்லூரி, தண்டையார்பேட்டை நிலையங்கள் சுரங்கத்தில் கட்டப்பட்டு உள்ளன.

புது வண்ணாரப் பேட்டை, சுங்கச்சாவடி, காலடிபேட்டை, திருவொற்றியூர் தேரடி, திருவொற்றியூர், விம்கோ நகர் என, எட்டு நிலையங்கள், தரைக்குமேல் கட்டப்பட்டு உள்ளன.

சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடந்த விழாவில், பிரதமர் மோடி இப்போக்குவரத்தை காணொலி வாயிலாக, நேற்று, நண்பகல், 12:10 மணிக்கு துவங்கி வைத்தார்.

வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையத்தில் நடந்த விழாவில், சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர்கள், சுஜாதா ஜெயராஜ், ராஜிவ் நாராயண் திவேதி, ராஜேஷ் சதுர்வேதி உள்ளிட்ட, அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்பின், மெட்ரோ அதிகாரிகள், வண்ணாரப் பேட்டையில் இருந்து, விம்கோ நகர் வரை மெட்ரோ ரயிலில் பயணம் செய்தனர்.

மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

கொரோனா தாக்கத்துக்கு முன், மெட்ரோ ரயிலில் தினமும், ஒரு லட்சம் பயணியருக்குமேல் பயணம் செய்தனர். ஊரடங்கு தளர்வுக்கு பின், துவக்க நாட்களில் பயணியர் போக்குவரத்து குறைவாக இருந்தது.

தற்போது, பயணியர் போக்குவரத்து, மீண்டும் ஒரு லட்சத்தை நெருங்கி உள்ளது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து, தற்போது, மெட்ரோ ரயில் போக்குவரத்து, விம்கோ நகர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், இனிவரும் காலங்களில், மெட்ரோ ரயிலில், தினமும், இரண்டு லட்சம் பேருக்கு மேல் பயணம் செய்வர் என, எதிர்பார்ப்பு உள்ளது.

■ மெட்ரோ ரயிலில் பயணித்த அதிகாரிகள்.

குடும்பத்தினருடன் இலவச பயணம்

■ சென்னை, வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் மெட்ரோ ரயில் சேவை துவங்கியதை அடுத்து அதில் பயணிக்க குவிந்த பொதுமக்கள்.

இடம்: தண்டையார்பேட்டை.

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் மெட்ரோ ரயிலுக்கு, பயணியரிடையே அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

மெட்ரோ ரயில், முதல் திட்ட, நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப் பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் போக்குவரத்து, நேற்று, துவங்கப்பட்டது. இதையொட்டி, நேற்று இலவசமாக பயணியர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

நேற்று, மதியம், 2:00 மணியில் இருந்து, இரவு, 11:00 மணி வரை, விமான நிலையம் – விம்கோ நகர், பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் இடையே, கட்டணமின்றி சென்று வர பயணியர் அனுமதிக்கப்படுவதாக, நேற்று முன்தினம் இரவு அறிவிக்கப்பட்டது. ஆனாலும், நேற்று, முன்னதாகவே, 12:50 மணியில் இருந்து, பயணியர் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இதனையொட்டி, விம்கோ நகர் – விமான நிலையம் இடையே, மதியம், 2:00 மணியில் இருந்து, பயணியர் போக்குவரத்து அதிகரித்தது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால், வட சென்னை மக்கள் அதிகமானோர், குடும்பத்தினருடன் மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய வந்தனர்.

மாலை, 4:00 மணியில் இருந்து, இரவு வரை, பயணியர் கூட்டம் அதிகம் இருந்தது. பயணியர் அமர்வதற்கு இடமின்றி, நின்றபடி பயணம் செய்தனர்.

உள்ளே... மெட்ரோ ரயில் நீட்டிப்பு பயணியர் கருத்து

58 நிமிட பயணம்

கட்டணம் 70 ரூபாய்

மெட்ரோ ரயிலில் விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை வரை, 60 ரூபாய் கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

விம்கோ நகருக்கு மெட்ரோ ரயில் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதால், விமான நிலையத்தில் இருந்து, விம்கோ நகருக்கு, 58 நிமிடங்களில் செல்லலாம். கட்டணம், 70 ரூபாய் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.